பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
11 07 2025 12 40
வெள்ளிக்கிழமை பிற்பகல்

ஆகாஷவாணி செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- பருத்தி இறக்குமதியை குறைத்து உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்க தேவையான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவராஜ் சிங் சவுகான் தெரிவித்துள்ளார்.

- 6-ஜி போன்ற நவீன தொலைத்தொடர்பு தொழில்நுட்பங்களை உருவாக்க மத்திய அரசு உறுதி பூண்டுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு ஜோதிராதித்யா சிந்தியா கூறியுள்ளார்.

- சுதந்திர போராட்ட வீரர் அழகு முத்துக்கோனின் பிறந்த நாளையொட்டி மத்திய இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் உள்ளிட்ட தலைவர்கள் அவருக்கு மரியாதை செலுத்தியுள்ளனர்.

- உள்நாட்டு தொழில்நுட்பத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட ஆயுதங்களை கொண்டு ஆபரேஷன் சிந்தூர் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதாக தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு அஜித் தோவல் தெரிவித்துள்ளார்.

- இத்தாலி சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் சுமித் நாகல் இன்று செக்குடியரசின் **Maxim Mrva** -ஐ எதிர்கொள்கிறார்.

*--- இனி விரிவான செய்திகள் ---*

பருத்தி இறக்குமதியை குறைத்து உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்க தேவையான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவராஜ் சிங் சவுகான் தெரிவித்துள்ளார்.

பருத்தி விவசாயிகள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் பஞ்சாலை தொழில் துறையினருக்கு ஏற்ற பருத்தி ரகங்களை உற்பத்தி செய்வது குறித்த கலந்தாலோசனை கூட்டம் கோவையில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் கரும்பு இனப்பெருக்க நிறுவன வளாகத்தில் நடைபெறுகிறது.

இதில் பங்கேற்க வந்த அமைச்சர் திரு சவுகான் அந்த வளாகத்தில் மரக்கன்றுகளை நட்டு வைத்தார்.

மேலும் பருத்தி சாகுபடிக்கு பயன்படுத்தப்படும் கருவிகள், டிரோன் மூலம் பூச்சிமருந்து தெளிப்பது குறித்த செயல் விளக்கத்தையும் அவர் பார்வையிட்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய அமைச்சர், உள்நாட்டு பருத்தி உற்பத்தி குறைவுக்கான காரணங்களை கண்டறிந்து பருத்தி சாகுபடியில் புரட்சியை ஏற்படுத்துவது குறித்து மத்திய ஜவுளித் துறை அமைச்சர் திரு கிரிராஜ் சிங், வேளாண் விஞ்ஞானிகள் மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சகங்களை சேர்ந்த அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தவிருப்பதாக தெரிவித்தார்.

பருத்தியை தாக்கும் பூச்சிகளை 6 மணி நேரத்திற்குள் கண்டறிந்து செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பத்தில் பூச்சிகளை கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்தும் ஆராயப்படவிருப்பதாக அவர் கூறினார்.

மேலும் பஞ்சாலை தொழில் துறையினருக்கேற்ற பருத்தி ரகங்களை சாகுபடி செய்வதன் மூலம் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பது குறித்தும் கருத்துக்களை கேட்டறிய உள்ளதாக திரு சிவராஜ் சிங் சவுகான் தெரிவித்தார்.

>><><><><<

6-ஜி போன்ற அடுத்த தலைமுறைக்கான தொலைத்தொடர்பு தொழில்நுட்பங்களை உருவாக்க மத்திய அரசு உறுதி பூண்டுள்ளதாக தொலைத்தொடர்புத் துறை அமைச்சர் திரு ஜோதிராதித்யா சிந்தியா தெரிவித்துள்ளார்.

6ஜி தொழில்நுட்பத்தில் புதுமைகளை அறிமுகப்படுத்துவது தொடர்பாக தொலைத் தொடர்புத் துறை செயலாளர் திரு நீரஜ் மிட்டல் உள்ளிட்டோருடன் புதுதில்லியில் ஆய்வு நடத்திய அவர், தொழில்நுட்ப மாற்றத்திற்கு தேவையான கொள்கை கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டு இருப்பதுடன் ஆராய்ச்சிக்கான நிதியும் அதிகரிக்கப்பட்டு இருப்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கான அலைக்கற்றை ஒதுக்கீட்டை குறித்த காலத்தில் மேற்கொள்வதுடன் பரிசோதனைகளை விரைவுப்படுத்துமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தின்போது 2030 ஆம் ஆண்டுக்குள் 6ஜி தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதில் இந்தியா உலகளவில் முன்னணி நாடாக திகழும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

>><><><><<

சுதந்திர போராட்ட வீரர் அழகு முத்துக்கோனின் பிறந்த தினத்தையொட்டி தலைவர்கள் அவருக்கு மரியாதை செலுத்தியுள்ளனர்.

இதனையொட்டி மத்திய இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், நாட்டின் முதல் விடுதலைப்போர் நடந்ததாக கூறப்படும் காலத்திற்கு முன்பே ஆங்கிலேயர்களை எதிர்த்து போரிட்டவர் மாவீரர் அழகு முத்துக்கோன் என்று குறிப்பிட்டுள்ளார்.

எதிரிகளின் பீரங்கி குண்டுக்கு இரையாகும் தருவாயிலும் தன்னை சார்ந்தவர்களை காட்டிக்கொடுக்காமல் உயிரை மாய்த்துக்கொண்டவர் கட்டாலங்குளம் சீமையை ஆண்ட அழகு முத்துக்கோன் என்றும் டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார்.

தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி வெளியிட்டுள்ள செய்தியில் துணிச்சல்மிகு சுதந்திர போராட்ட வீரரான அழகுமுத்துக்கோன் கருணையுள்ள ஆட்சியாளராகவும், இந்திய சுதந்திர போராட்ட காலத்தின் ஆரம்ப கால வழிகாட்டியாகவும் திகழ்ந்தவர் என புகழாரம் சூட்டியுள்ளார்.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் அழகு முத்துக்கோன் பிறந்தநாள் கொண்டாடப்பட்டு வருகிறது.

சென்னை எழும்பூரில் உள்ள அழகு முத்துக்கோன் சிலை முன்பாக வைக்கப்பட்டு இருந்த அவரது திருவுருவப் படத்திற்கு தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் மற்றும் அமைச்சர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

தூத்துக்குடி மாவட்டம் கட்டாலங்குளத்தில் அழகு முத்துகோன் மணிமண்டபத்தில் உள்ள அவரது சிலைக்கு மாநில அமைச்சர் திருமதி கீதா ஜீவன் உள்ளிட்டோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

>><><><><<

உள்நாட்டு தொழில்நுட்பத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட ஆயுதங்களை கொண்டு ஆபரேஷன் சிந்தூர் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதாக தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு அஜித் தோவல் தெரிவித்துள்ளார்.

சென்னை ஐஐடியின் 62 ஆவது பட்டமளிப்பு விழாவில் இன்று பேசிய அவர், அதிகாலை ஐந்து மணி ஒரு நிமிடத்திற்கு தொடங்கிய தாக்குதல் 28 நிமிடங்களில் முடிவடைந்ததாகவும், எல்லையோரப் பகுதிகள் இல்லாமல் பாகிஸ்தானுக்குள் ஒன்பது இடங்களை துல்லியமாக தாக்கப்பட்டதாகவும் கூறினார்.

2047 ஆம் ஆண்டு இந்தியாவை வல்லரசாக மாற்றுவதற்கான அனைத்து அம்சங்களும் இன்றைய மாணவர்களிடையே உள்ளதாகவும் உள்நாட்டு தொழில் நுட்பத்தில் நவீன கண்டுபிடிப்புகளை உருவாக்க வேண்டும் என்று கூறிய அவர், நாட்டின் பாதுகாப்பு தொழில்நுட்பத்தை வலுப்படுத்த வேண்டும் என்று கூறினார்.

உலகில் மிகச்சிறந்த முன்னேற்றங்களை ஏற்படுத்தி வரும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்திற்கு தேவைப்படும் அனைத்து அடிப்படை ஆதாரங்களும் இந்தியாவில் இருப்பதாகவும் இதனை பயன்படுத்தி மேம்பாடு காண்பதற்கு மாணவர்கள் முன்வர வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இந்தியாவில் உள்ள மாணவர்கள், இளைஞர்கள் நாட்டின் மேம்பாட்டை கருத்தில் கொண்டு பொருளாதாரம், கல்வி, புதிய கண்டுபிடிப்புகள், புலனாய்வு, எரிசக்தி, தகவல் தொழில்நுட்பம் போன்றவற்றில் நவீன உத்திகளை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று திரு அஜித் தோவல் கேட்டுக் கொண்டார்.

>><><><><<

**உலக மக்கள் தொகை தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.**

**மக்கள் தொகை தொடர்ந்து அதிகரித்து வருவதால் ஏற்படும் சவால்கள் மறறும் வாய்ப்புகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும்** வகையில் **இந்நாள் கடைபிடிக்கப்படுகிறது.**

**இந்நாளையொட்டி மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு.ஜெ.பி.நட்டா வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் குடும்பக் கட்டுப்பாடு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கும் மக்கள் தொகை சார்ந்த சவால்களை எதிர்கொள்வதற்கான இந்தியாவின் உறுதிப்பாட்டை செயல்படுத்துவதற்கு இந்நாள்** பெரிதும் **பயன்படுவதாக தெரிவித்துள்ளார்.**

**ஆயுஷ்மான் ஆரோக்கிய மையங்கள் வாயிலாக குடும்பக் கட்டுப்பாடு குறித்த அத்தியாவசிய சேவைகளை நாடு முழுவதும் அரசு வழங்கி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.**

**உலக மக்கள் தொகை தினத்தையொட்டி தமிழகத்திலும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றது.**

**சென்னையில் செம்மொழிப் பூங்கா முதல் டி.எம்.எஸ். வளாகம் வரை நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியை** தமிழக **மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா சுப்பிரமணியன் தொடங்கி வைத்து உறுதிமொழி செய்து வைத்தார்.**

**தூத்துக்குடியில் கடற்கரை சாலையில் உள்ள புனித மரியன்னை கல்லூரியிலிருந்து மாவட்ட ஆட்சியர் திரு. இளம்பகவத் தலைமையில் நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியை மாநில சமூகநலத்துறை அமைச்சர் திருமதி.கீதாஜீவன் தொடங்கிவைத்தார்.**

**பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழகத்தில் குழந்தை திருமணங்களை தடுப்பதற்கு கடந்த நான்கு ஆண்டுகளாக தீவிர விழிப்ணர்வு ஏற்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்தார்.**

**>><><><><<**

விவசாயிகளுக்கு உதவும் வகையில் மத்திய அரசு பிரதமரின் பயிர்க்காப்பீடு திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

தமிழகத்தில் மயிலாடுதுறை மாவட்டத்தில் குறுவை நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் இம்மாதம் 31 ஆம் தேதிக்குள் இத்திட்டத்தின் கீழ் காப்பீடு செய்து பயன்பெறுமாறு மாவட்ட நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - மணிகண்டன் - 47 செகண்ட்ஸ்)

**>><><><><<**

ஒரே நாடு ஒரே தேர்தல் தொடர்பான நாடாளுமன்ற கூட்டுக் குழுவின் கூட்டம் புதுதில்லியில் தற்போது அதன் தலைவர் திரு பி பி சவுத்திரி தலைமையில் நடைபெற்று வருகிறது.

இன்றைய கூட்டத்தில் உச்சநீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி திரு டி ஒய் சந்திரசூட், நீதிபதி திரு ஜே எஸ் கேஹர் ஆகியோர் தங்களது கருத்துக்களை தெரிவிக்கவுள்ளனர்.

பிஜேபியை சேர்ந்த திரு அனுராக் தாக்கூர், காங்கிரஸ் கட்சியின் திருமதி பிரியங்கா காந்தி உள்ளிட்ட கூட்டுக்குழு உறுப்பினர்களும் இந்த கூட்டத்தில் பங்கேற்றுள்ளனர்.

**>><><><><<**

விளையாட்டுச் செய்திகள்

இத்தாலியில் நடைபெற்று வரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் சுமித் நாகல் இன்று செக்குடியரசின் **Maxim Mrva** -ஐ எதிர்கொள்கிறார்.

**>><><><><<**

ரொமேனியாவில் நடைபெற்று வரும் சர்வதேச சாலஞ்சர் டென்னிஸ் போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் அர்ஜூன் கதே – விஜய் சுந்தர் பிரசாந்த் இணை இன்று ஜிம்பாப்வேயின் **John Lock** நெதர்லாந்தின் **Thijmen Loof** இணையை எதிர்கொள்கிறது.

**>><><><><<**